பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**06 12 2025 SATURDAY 6.30 PM**

**மாநிலச் செய்திகள்**

**தலைப்புச் செய்திகள்**

**1)** காலநடை வளர்ப்போரின் வருமானத்தை வரும் ஐந்தாண்டுகளில் 20 சதவீதம் உயர்த்துவதற்கான நடவடிக்கையை மத்திய அரசு மேற்கொண்டுள்ளதாக கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

**2)** இண்டிகோ நிறுவனத்தின் நெருக்கடியை சாதகமாக பயன்படுத்தி இதர விமான நிறுவனங்கள் உள்நாட்டு சேவைக்கு கூடுதல் கட்டணம் வசூலிக்கக் கூடாது என்று சிவில் விமான போக்குவரத்து அமைச்சகம் எச்சரித்துள்ளது.

**3) Ditwah** புயலால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு தமிழக மக்களின் சார்பில் நிவாரணப் பொருட்களை முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் இன்று சென்னையில் இருந்து அனுப்பிவைத்தார்.

**4)** தமிழகத்தின் கடலோர மற்றும் உள்தமிழக மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் அடுத்த 24 மணிநேரத்தில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**5)** தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான 3-வது மற்றும் இறுதி ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வெற்றிபெற 271 ரன் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<<>>>>>>

கால்நடை வளர்ப்போரின் வருமானத்தை வரும் ஐந்தாண்டுகளில 20 சதவீதம் உயர்த்துவதற்கான நடவடிக்கையை மத்திய அரசு மேற்கொண்டுள்ளதாக கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

குஜராத் மாநிலம் Sanadar-ல் இன்று பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய அவர், பால்வளத்துறையில் சுற்றுவட்ட பொருளாதார நடைமுறை கொண்டுவரப்பட்டு, மேம்படுத்தப்படும் என்றும் கூறினார்.

ஆசியாவிலேயே மிகப்பெரிய பனாஸ் பால்பண்ணையில் சுற்றுவட்ட பொருளாதாரம் மாதிரி வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதனை நாடு முழுவதும் விரிவுபடுத்துவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொண்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

தேசிய கோகுல இயக்கம், கால்நடை வளர்ப்பு கட்டமைப்பு, கால்நடை நோய் தடுப்புத் திட்டம், பால்பண்ணை மேம்பாடு ஆகிய இலக்குகளை முன்நிறுத்தி இரண்டாவது வெண்மை புரட்சியை வெற்றிபெறச் செய்ய முயற்சி எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்ற குழுவினர் பனாஸ் பால்பண்ணையை பார்வையிட்டுள்ளதாகவும், அவர்களுடனான ஆலோசனை கூட்டத்திற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பனாஸ் பால்பண்ணையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பயோ செறிவூட்டப்பட்ட எரிவாயு திட்டத்தையும், இயற்கை உர தொழிற்சாலையையும் திரு அமித் ஷா இன்று தொடங்கிவைத்தார்.

<<<<<<<>>>>>>

பொருளாதார மற்றும் சமூக ரீதியாக பின்தங்கிய மக்களை மேம்படுத்த கல்வி அவசியம் என்று மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

உத்தரப்பிரதேச மாநிலம் நொய்டாவில் உள்ள கல்லூரி பட்டமளிப்பு விழாவில் உரையாற்றிய அவர், நாட்டையும், சமூகத்தையும் வளம் மிக்கதாக உயர்த்த மாணவர்கள் தங்களது கடமையை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

பொது வாழ்வில் நேர்மையாக இருந்து மக்களுக்காக உழைக்க வேண்டும் என்ற உறுதிபாட்டோடு உள்ளவர்கள் அரசியலுக்கு தேவை என்று அவர் வலியுறுத்தினார்.

**140** கோடி மக்களின் எதிர்பார்ப்புகளையும் பூர்த்தி செய்யும் நோக்கத்தோடு அரசியல் தலைவர்கள் செயல்பட வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

பொது வாழ்வு மற்றும் அரசியல் குறித்த நேர்மறையான சிந்தனைகளை மாணவர்களிடையே உருவாக்கும் பொறுப்பு பல்கலைக்கழகங்களுக்கு உள்ளதாக அவர் கூறினார்.

அதிக அளவில் இளைஞர்கள் மற்றும் இளம் பெண்கள் பொது வாழ்வில் பங்கேற்க முன்வர வேண்டும் என்றும், அவர்களின் ஒத்துழைப்பினால் நாட்டை வலிமையாக்க முடியும் என்றும், உலக அளவில் நன்மதிப்பை உருவாக்க முடியும் என்றும் திரு பியூஷ் கோயல் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

இண்டிகோ நிறுவனத்தின் நெருக்கடியை சாதகமாக பயன்படுத்தி இதர விமான நிறுவனங்கள் உள்நாட்டு சேவைக்கு கூடுதல் கட்டணம் வசூலிக்கக் கூடாது என்று சிவில் விமான போக்குவரத்து அமைச்சகம் எச்சரித்துள்ளது.

இதுதொடர்பாக, சிவில் விமான போக்குவரத்து அமைச்சகம் வெளியிட்டுள்ள உத்தரவில், **500** கிலோமீட்டர் தூரத்திற்கான உள்நாட்டு விமான போக்குவரத்துக்கு அதிகபட்சமாக **7** ஆயிரத்து

**500** ரூபாய் வரை மட்டுமே கட்டணம் வசூலிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**500** கிலோமீட்டரில் இருந்து ஆயிரம் கிலோமீட்டர் தூரம் வரை **12** ஆயிரம் ரூபாயும், ஆயிரம் கிலோமீட்டரிலிருந்து, ஆயிரத்து **500** கிலோமீட்டர் தூரத்திற்கு **15** ஆயிரம் ரூபாயும், அதற்குமேல் **18** ஆயிரம் ரூபாய் வரையும் அதிகபட்ச கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளதை விமான போக்குவரத்து அமைச்சகம் சுட்டிக்காட்டியுள்ளது.

<<<<<<<>>>>>>

**Ditwah** புயலால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு தமிழக மக்களின் சார்பில் நிவாரணப் பொருட்களை முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் இன்று சென்னை துறைமுகத்தில் இருந்து அனுப்பிவைத்தார்.

இதேபோன்று, தூத்துக்குடி துறைமுகத்தில் இருந்து நிவாரணப் பொருட்களை மாநில அமைச்சர் திருமதி கீதா ஜீவன் அனுப்பிவைத்தார்.

பருப்பு, சர்க்கரை, பால் பவுடர், வேட்டிகள், சேலைகள், போர்வைகள் உள்ளிட்ட பொருட்கள் இதில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

<<<<<<<>>>>>>

தமிழகத்தில், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளின் கீழ், இதுவரை 99 புள்ளி எட்டு ஆறு சதவீத விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இதன்படி, 6 கோடியே, 40 லட்சத்து 24 ஆயிரத்து 854 விண்ணப்பங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதில், 98 புள்ளி ஆறு ஒன்பது சதவீத விண்ணப்பங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கிடையே, நாமக்கல் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியலில் உள்ள 96 சதவீதம் பேரின் கணக்கீட்டுப்படிவங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் திருமதி துர்கா மூர்த்தி தெரிவித்துள்ளார்.

*(Sound Byte — ஆட்சியர் துர்கா மூர்த்தி - 63 Sec. )*

<<<<<<<>>>>>>

தமிழகத்தின் கடலோர மற்றும் உள்தமிழக மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் அடுத்த 24 மணிநேரத்தில் மிதமான மழைக்கு

வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதியில் சூறாவளி காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு அவர் அறிவுறுத்தியுள்ளார்.

<u>*(Sound Byte — செந்தாமரை கண்ணன் — 38 Sec.*</u> **)**

*<<<<<<<>>>>>>*

மாவட்டச் செய்திகள்

காஞ்சிபுரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சுமார் 23 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாநில அமைச்சர் திரு காந்தி பயனாளிகளுக்கு இன்று வழங்கினார்.

-----------------

டாக்டர் அம்பேத்கர் நினைவு தினத்தைமுன்னிட்டு, தென்காசியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சுமார் எட்டு கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு, மாவட்ட ஆட்சியர் திரு கமல் கிஷோர் வழங்கினார்.

-----------------

செங்கல்பட்டு மாவட்டம் பூங்குணம் ஊராட்சியில் மாணவர்களுக்கு கல்வி மற்றும் விளையாட்டு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மாராத்தான் ஓட்டம் இன்று நடைபெற்றது.

----------------

திருச்சி ரயில்வே ஜங்ஷனில் ரயில்வே பாதுகாப்புப்படையினர் நடத்திய சோதனையில் **18** லட்சம் ரூபாய் மதிப்பிலான போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டது.

-----------------

ஜம்மு காஷ்மீரில் பணியின் போது வீர மரணமடைந்த திருவள்ளூர் மாவட்டம் சத்ரன் ஜெயபுரம் ஊராட்சியை சேர்ந்த ராணுவ வீர் சக்திவேலின் உடலுக்கு மாநில அரசு சார்பில் காவல்துறை மரியாதையுடன், **21** குண்டுகள் முழங்க இறுதி அஞ்சலி செலுத்தப்பட்டது.

-----------------

காஞ்சிபுரம் அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் திருக்கோவில் குடமுழுக்கு திருவிழா வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ளதையொட்டி அன்றைய தினம் காஞ்சிபுரம் நகரத்தை சுற்றியுள்ள **149** பள்ளிகளுக்கு உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

**தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான 3வது மற்றும் இறுதி ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 271 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பேட் செய்து வரும் இந்தியா சற்றுமுன்வரை 11 ஓவரில் விக்கெட் இழப்பின்றி 54 ரன் எடுத்துள்ளது.**

**விசாகப்பட்டினத்தில் நடைபெற்று வரும் இப்போட்டியில், முதலில் பேட் செய்த தென்னாப்பிரிக்கா 47 புள்ளி ஐந்து ஓவரில், 270 ரன் எடுத்து ஆட்டமிழந்தது.**

------------

**குவஹாத்தி மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் மிதுன் மஞ்சுநாத் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்..**

**<<<<<<<END>>>>>>**